விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 331 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 28 வியாழக்கிழமை (14.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# 10ஆவது பாராளுமன்ற தேர்தல் இன்று

## காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்கெடுப்பு
## நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை தேர்தலுக்கான வாக்கெடுப்பு இடம்பெறும். தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை கண்காணிக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்காக இலங்கை பொலிஸார் விசேட நடவடிக்கை மையம் ஒன்றை நிறுவியுள்ளனர்.

இலங்கை 15

## மட்டுவிலில் கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் கிராமத்தில் இளைஞன் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

## தேர்தலில் வாக்களிக்க விடுமுறை வழங்காவிட்டால் ஒரு மாத காலம் சிறை

### பெப்ரல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க செல்ல விடுமுறை வழங்காத நிறுவனங்கள் தொடர்பாக எமக்கு முறைப்பாடு கிடைத்திருக்கிறது. அவ்வாறு விடுமுறை

16

## தாமதிக்காமல் காலையில் வாக்களிக்கச் செல்லுங்கள்

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கான சகல பணிகளும் சிறந்த முறையில் நிறைவடைந்துள்ளன. தாமதமில்லாமல் காலையில் வாக்களிக்கச் செல்லுங்கள். வாக்களிக்கச் செல்லும்போது வாக்காளர் அட்டை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையைக் கொண்டு செல்லுங்கள்.

தேர்தல் பணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் செயற்படுங்கள் எனத்தேர்தல்

16

## தீவகத்துக்கு படகு மூலம் வாக்குப் பெட்டி எடுத்துச் செல்லப்பட்டது



15

## தேர்தல் சட்டங்களுக்கு அமைய பொறுப்புடன் செயற்படுங்கள்

### பதில் பொலிஸ்மா அதிபர் மக்களிடம் கோரிக்கை



(கொழும்பு)

தேர்தல் சட்டத்துக்கும் பொதுச் சட்டத்துக்கும் அமைய பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பதில் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் 13,421 வாக்களிப்பு மத்திய நிலையங்களின் பாது

15

## மதவாச்சியில் மின்னல் தாக்கி ஒருவர் பலி

(அநுராதபுரம்)

மதவாச்சியில் நேற்றுப் பிற்பகல் மின்னல் தாக்கி 47 வயதுடையநபர் ஒருவர் உயிரி

15

## பாராளுமன்றத் தேர்தல் வாசகர் கருத்துக்கணிப்பு

### இன்று மாலை 4 மணி வரை நீடிப்பு

1ஆம் பரிசு 10,000/-
2ஆம் பரிசு 7,000/-
3ஆம் பரிசு 5,000/-

பரிசை வெல்ல உடனே வட்சப்பில் அனுப்புக

02ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் தலைகீழாக புரண்டு ஹயஸ் விபத்து

### குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் தலை கீழாகப் புரண்டு ஹயஸ் விபத்துக்குள்ளானதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


மட்டக்களப்பைச் சேர்ந்த குகதாஸ் விஜிதா (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

கணவனை இழந்த நிலையில் மகளுடன் மட்டக்களப்பில் வசித்து வந்த குறித்த பெண் உரும்பிராயில் உள்ள மாமியார் வீட்டில்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியாக தேர்தல் நடைபெற யாழில் சர்வமத பிரார்த்தனை



பாராளுமன்றத் தேர்தல் அமைதியாகவும் வன்முறைகள் அற்ற முறையில் நடைபெறவேண்டியும் மக்கள் அனைவரும் தமது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டி யாழ்ப்பாணத்தில் சர்வமத பிரார்த்தனை சர்வமத தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஆயர் இல்லத்தில் யாழ்ப்பாண சர்வமதத் தலைவர் இந்து மதகுரு கிருபானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் சர்வமதத் தலைவர்களால் மங்கல விளக்கேற்றப்பட்டு, பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் எனவும், மக்கள் தமது ஜனநாயக கடமையை சரியாக நிறைவேற்ற வேண்டும் எனவும் பிரார்த்தனை செய்தார்கள்.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்களான கத்தோலிக்க திருச்சபை சார்பில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெயரட்ணம், இந்து சமய குரு கிருபானந்தா, பௌத்த மதத் தலைவர் சார்பில் நாக விகாரை விகாராதிபதி விமலரத்ன தேரர், இஸ்லாமியர்களின் சார்பில் ரகீம் மௌலவி, தென்னிந்திய திருச்சபை சார்பில் சர்வமத பேரவை செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,33)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுள் பொருளாதார ரீதியில் நலிவுற்ற குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 33 மாணவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1982 - 1986 இல் பட்டம் பெற்ற கலை, வணிக, முகாமைத்துவ பிரிவினரின் "கல்விக்கு கரம் கொடுப்போம்" என்ற அமைப்பு மேற்படி நிதியுதவியை கடந்த 9 ஆம் திகதி வழங்கி வைத்தது.

ஒவ்வோர் ஆண்டும் மாணவர்களைத் தெரிவு செய்து மேற்படி நிதியுதவி வழங்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# தேர்தல் கால அனர்த்தம் தொடர்பில் அறிவிக்க

## விசேட தொலைபேசி இலக்கம்

தேர்தல் காலத்தில் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்பட்டால் அது தொடர்பில் அறிவிப்பதற்காக 06 விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

070 211 7117, 011 366 8032, 011 366 8087, 011 366 8025, 011 366 8026 மற்றும் 011 366 8019 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொலைபேசி இலக்கம் 16ம் திகதி வரை சேவையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், ஆயுதப்படை மற்றும் பொலிஸ் ஆகியன இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. (ம-7)

# மன்னார் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு வழங்கப்படவிருந்த உணவுப் பொதிகள் மீட்பு

## மூன்று சந்தேகநபர்கள் கைது



(மன்னார்)

மன்னாரில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சி ஒன்றினால் வழங்குவதற்கு என கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொருட்கள் நேற்று புதன்கிழமை (13) மாலை மன்னார்-யாழ் பிரதான வீதியில் வைத்து அடம்பன் பொலிஸாரினால் வாகனம் ஒன்றில் வைத்து மீட்கப்பட்டுள்ளதோடு மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மன்னார்-யாழ் பிரதான வீதியில் வைத்து வாகனம் ஒன்றை சோதனை செய்த போது குறித்த வாகனத்தில் ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்கள் காணப்பட்டது.

இதன் போது பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் போது குறித்த உலர் உணவுப் பொருட்கள் அரசியல் கட்சி ஒன்றினால் வாக்காளர்களுக்கு வழங்கக் கொண்டு வரப்பட்டமை தெரியவந்தது.

இந்த நிலையில் குறித்த பொருட்களை பொலிஸார் அடம்பன் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதோடு, குறித்த வாகனத்தின் சாரதி, உதவியாளர் உள்ளடங்கலாக வாகனத்தில் பயணித்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த வாகனத்தில் சுமார் 290 நபர்களுக்கு வழங்கக் கூடிய வகையில் தயார் செய்யப்பட்ட 5 கிலோ அரிசி பக்கட், 2 கிலோ மா,1 கிலோ சீனி,20 கிராம் ரிங்சோ பக்கட் 5 வீதம் தயார் செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பொருட்கள் 6 லட்சத்து 13 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அடம்பன் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களையும், மீட்கப்பட்ட பொருட்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். (ம-7,285)

## பாராளுமன்றத் தேர்தல்-2024

### வாசகர்களின் கருத்துக் கணிப்பு

- **யாழ்ப்பாணம்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்**
- **வன்னித் தேர்தல் மாவட்டம்**

1. மேற்குறித்த இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெற்றுக் கொள்ளும் ஆசனங்கள்.
2. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பெயர்களை தனித்தனி தேர்தல் மாவட்டங்களாக (யாழ்ப்பாணம், வன்னி) குறிப்பிட்டு வலம்புரி நாளிதழின் **076 097 3128** எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்**

கருத்துக் கணிப்பை அனுப்புபவர்கள்
**முழுப்பெயர், முகவரி,**
**தே.அ.அ.இல,**
**தொ.பே.இல.**
ஆகிய விபரங்களை உள்ளடக்குவதுடன் ஒருவர் ஒரே மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக் கணிப்புக்களை முன்வைக்க முடியாது என்பதையும் 16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் இக் கருத்துக்கணிப்பில் பங்குபற்ற முடியும் என்பதையும் கவனத்தில் கொள்க.

**முக்கிய குறிப்பு**

மிகச் சரியான கணிப்பை அனுப்பி வைத்தவர்களின் பெயர் விபரம் வலம்புரியில் வெளியிடப்படும்.

மிகச் சரியான கணிப்பை வெளிப்படுத்தியவர்களில் குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள் தீர்மானிக்கப்படுவர்.

**கருத்துக் கணிப்பை இன்று (14.11.2024) மாலை 4.00 மணி வரை அனுப்பி வைக்க முடியும்.**

நிர்வாகம், வலம்புரி.

# வாக்களிப்பின் போது

# இடது கை ஆட்காட்டி விரல் மீது அடையாளம் இடப்படும்

## தேர்தல்கள் ஆணைக் குழு

பொதுத்தேர்தலின்போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடப்படும். வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறு ஏதேனுமொரு விரலில் உரிய அடையாளம் இடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் உரிய அடையாளம் இடப்பட்டது. அத்துடன் கடந்த மாதம் 26ஆம் திகதி (சனிக்கிழமை) நடைபெற்ற காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்காளரின் இடது கை பெருவிரலில் உரிய அடையாளம் இடப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38(3) (ஆ) பிரிவின் பிரகாரம், வாக்களிப்பின்போது வாக்களிப்பதை அடையாளப்படும்போது எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடப்படும். வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறு ஏதேனுமொரு விரலில் உரிய அடையாளம் இடப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு மற்றும் 25 ஆம் ஆண்டு

# நினைவலைகளுடன்...



பிறப்பு 1930 . 07 . 10

இறப்பு 2023 . 11 . 25

பிறப்பு 1929 . 07 . 13

இறப்பு 1999 . 10 . 22

அமரர் **கந்தர் நடராசா**

அமரர்.திருமதி. **நடராசா செல்வரத்தினம்**

ஆண்டு ஒன்றாகிறது தந்தையே உமைப்பிரிந்து...
ஆண்டுகள் இருபத்து ஐந்தானது அன்னையே உமை இழந்து...
வருடங்கள் நீண்டு செல்லும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனங்களில் நீங்காது வாழும்
உடல்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றாலும்
அன்னை, தந்தையாய் -எப்போதும்
எம் அகத்தில் நீங்கள் நிலைத்திருப்பீர்கள்!
பிறப்பு உண்டேல் இறப்பு நிச்சயம்- ஆயினும்
உங்கள் இழப்பை எம்மால் ஈடு செய்ய முடியவில்லை!
கனத்த மனத்துடன் உங்கள் ஆத்ம சாந்திக்காய் அவன் தாள்
இறைஞ்சி வேண்டுகின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!!!


" செல்வ வாசா"
கண்டுவில் லேன், சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுச் செய்திகள்

# மரடோனா, மெஸ்ஸி வரிசையில் ‘இளம் புயல்’








அன்று மரடோன் மெஸ்ஸி தற்போது லாமின் யமல் என உலகக் கோப்பை, கால்பந்தின் உயரிய விருதான Ball ond'Or, FIFAவின் சிறந்த வீரராகிய விருது களைப் பெற்ற ஜேர் மனியின் முன்னாள் வீரரான லோதர் மாத்தஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடக்கும் யூரோ கால்பந்து போட்டி களின் 4ஆவது முறையாக சம்பியனாகியிருக்கிறது ஸ்பெயின். அதில் அதிக அசிஸ்ட் கொடுத்த வீரர் என்ற அடிப்படையில் சிறந்த இளம் வீரருக்கான விருதை வென்றிருக்கிறார் 17 வயதான லாமின் யமல்.

ஆரம்பக்கால மெஸ்ஸியினை போலவே துல்லியமான பாஸிங், வேகமான டிரிபிலிங், கச்சிதமான ஷூட் என இந்தப் பள்ளிச் சிறுவனின் இடது கால் கதிகலங்க வைத் திருப்பது யூரோவில் ஜாம்பவான் களாக இருக்கும் இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற மூத்த தேசிய அணி வீரர்களை! அதிலும் பிரான்ஸின் நட்சத்திர வீரரான எம்பாப்பே இவர் அடித்த கோலினைப் பார்த்து உறைந்து நின்ற காட்சிகள் சொல்வது ஒன்று தான்.

“அடுத்த மரடோனா, மெஸ்ஸி உருவாகப் போகிறான் என்பதல்ல, கால்பந்து உலகில் லாமின் யமல் என்கிற புது நட்சத் திரம் உருவாகிக் கொண்டிருக்கிறான்” என்பதே என தெரிவித் தார். (6-8)

## டபிள்யு.டி.ஏ டென்னிஸ் சம்பியனான கோகோ காப்




டபிள்யு.டி.ஏ., பைனல்ஸ் தொடரில் முதன் முறையாக கோப்பை வென்றார் கோகோ காப்.

சவுதி அரேபியாவின் ரியாத்தில் டபிள்யு.டி.ஏ. பைனல்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்றது. உலகத் தரவரிசையில் முன்னணியில் உள்ள 8 வீராங்கனைகள் பங்கேற்றனர்.

பைனலில் அமெரிக்காவின் கோகோ காப், சீனாவின் குயின் வென் ஜெங் மோதினர். முதல் இரு செட்டை குயின்வென் (6-3), கோகோ காப் (6-4) என மாறிமாறி கைப்பற்றினர். வெற்றியாளரை முடிவு செய்ய நடந்த “டை பிரேக்கரில்” குயின்வென், 7-6 என அசத்தினார். 3 மணி நேரம், 7 நிமிடம் நடந்த போராட்டத்தின் முடிவில், கோகோ காப் 3-6, 6-4, 7-6 என வென்று சம்பியன் ஆனார். இவருக்கு ரூ. 40.50 லட்சம் பரிசுத் தொகை கிடைத்தது.

டபிள்யு.டி.ஏ., பைனல்ஸ் தொடரில் இவர் வென்ற முதல் கோப்பை இது. செரினா வில்லியம்சிற்குப் பின் (2014), இத்தொடரில் கோப்பை வென்ற அமெரிக்க வீராங்கனை ஆனார். தவிர 2004இல் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுக்குப் பின், இத்தொடரில் சாதித்த இளம் வீராங்கனை கோகோ காப் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

## பந்துவீச்சு பயிற்சியாளராக முனாப் பட்டேல் நியமனம்



டில்லி அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக இந்திய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் முனாப் பட்டேல் நியமிக்கப்பட்டுள்ளார். ஐ.பி.எல் தொடரின் 18 ஆவது சீசன் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் இதற்கான மெகா ஏலம் நவம்பர் இறுதியில் நடைபெறவுள்ளது.

மெகா ஏலம் தொடங்குவதற்கு முன்பாக அனைத்து அணிகளும் பயிற்சியாளர்களை நியமித்து வருகிறது.

அந்த வகையில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ரிக்கிபாண்டிங் நீக்கப்பட்டார். இதை தொடர்ந்து அந்த அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் வீரரும் தமிழகத்தை சேர்ந்தவருமான ஹேமாங் பதானி நியமிக்கப்பட்டார். டில்லி அணி அக்சர் பட்டேலை ரூ.16.50 கோடிக்கும் குல்தீப் யாதவை ரூ.13.25 கோடிக்கும் தென் ஆப்பிரிக்க வீரர் ஸ்டப்சை ரூ.10 கோடிக்கும் அபிஷேக் போரெலை ரூ.4 கோடிக்கும் என மொத்தம் நான்கு பேரை ரூ.47 கோடி கொடுத்து தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை. (533)

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974



## வாடகைக்கு

நாவலர் வீதியில் யாழ்ப்பாணத்தில் இரண்டு பெண்கள் வசிக்கக் கூடிய அனெக்ஸ் (வீட்டின் பகுதி) வாடகைக்கு உண்டு.

077 788 7360

(சி-2488)


## பெயர்மாற்ற அறிவித்தல்

இல: 16, 2 ஆம் குறுக்குத்தெரு குருநகர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசிக்கும் பாத்திமா சாரா எனும் பெயரை இன்று முதல் மதுரா என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன். (2421)

உண்மையுள்ள மதுரா.ஐ

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையில் கடமையாற்றிய

திரு.,
### சி.சிவடேந்திரன்

அவர்கள் 12.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்/ ஊழியர்கள். விலங்கியல்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 1942-02-05, உதிர்வு 2024-11-13,

வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள தலைமைப்பீட சமூக சேவை உத்தியோகத்தர் திரு. வி.சண்முகநாதன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். ### கௌரியம்மா விநாயகமூர்த்தி

13.11.2024 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் **வி.சண்முகநாதன்** குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவுத்துயருடன்...*
வடக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கம்.

## 2 ஆம் ஆண்டு சிரார்த்ததின அழைப்பு

தோற்றம் 06 . 03 . 1948



மறைவு 07 . 11 . 2022

கடந்த 07.11.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர். **இராசரத்தினம் வள்ளியம்மா**

அவர்களின் இரண்டாம் ஆண்டு சிரார்த்ததின நிகழ்வு 14.11.2024 இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (சி-1580)

நாவலடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

தகவல்–குடும்பத்தினர்.
077 428 1262

# இராசிபலன்

14.11.2024
ஐப்பசி 28, வியாழக்கிழமை
திரயோதசி முற்பகல் 8.10 மணிவரை
சதுர்த்தி பின்னிரவு 5.50 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 12.15 மணிவரை
சுபநேரம் -7.37-9.07 மணிவரை
இராகுகாலம் -1.37-3.07 மணிவரை

சந்திராஷ்டமம்.
பூரம், உத்திரம்.

வளவன்

**மேஷம்** வீட்டில் சில மாற்றங்களை செய்யமுற்படுவீர்கள், எதிர் பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்க்கை தரம் உயர வழிவகை செய்வீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**துலாம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காண வேண்டிய நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை தேடி வரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன இடம் பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தோன்றும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** பாசப் பரிவினைகள் சுமூகமாக அமையும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம், வாகன பழுது செலவுகள் உருவாகும், வெளியூர் பயணங்களின் போது கவனம் தேவை, ரோகபயமுண்டு.

**தனுசு** நெடு நாளைய கனவுகள் நனவாகும், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு

தன்னைத்தானே வெல்பவனே உண்மையான வீரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பாக எடுத்து செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்







(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத் தேர்தல் இன்று இடம்பெறும் நிலையில் நேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் யாழ்.மத்திய கல்லூரியிலிருந்து அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்கு பெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டது.

அதேவேளை நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளுக்கு வாக்குப் பெட்டிகளை விசேட படகுகள் மூலம் எடுத்துச் செல்லப்பட் டது.

வவுனியா மாவட்டத்தில் 128, 585 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் 152 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டது.

(6-8-33-100-250-316)

## பவள விழாவை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையம் தமது பவள விழாவை முன்னிட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுப்பிட்டி சனசமூக நிலைய மைதானத்தில் விளையாட்டு போட்டிகளை நடத்தவுள்ளது.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மாட்டு வண்டி சவாரி, துவிச்சக்கர வண்டி ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டம் போன்ற போட்டிகள் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8-90)

## கைதான இந்திய மீனவர்கள் 12 பேர் விளக்கமறியலில்

(கரணவாய்)

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகிய 12 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்திருந்தனர்.

கைதாகிய பன்னிருவரையும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் மயிலிட்டித் துறை முகத்தில் கையளிக்கப்பட்டனர்.

தொடர்ந்து இந்திய மீனவர்களை நீரியல்வளத்துறை அதிகாரிகள் பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் இந்திய மீனவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (6-8-60)

## வடக்கு ஆளுநரை சந்தித்த யாழ்.தமிழ் சங்கத்தினர்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனை யாழ்ப்பாண தமிழ் சங்கத்தினர் நேற்றுக் காலை நல்லெண்ண அடிப்படையில் சந்தித்தனர்.


இதன்போது சங்கத்திற்கான நிரந்தர இடம் அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடினர்.

அதேவேளை சங்க ஆட்சிகுழு உறுப்பினர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரைநூல் இச்சந்திப்பின் போது ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ்ச் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் தி. வேல்நம்பி முனைவர் மனோன்மணி சண்முக தாஸ் செயலாளர் ச. லலீசன் விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.(6-8-33)

## சேதமடைந்த வீதியை புனரமைத்து தாருங்கள்

### கட்டுடை மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கட்டுடை வீதியினை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானிப்பாய் மேற்கு கட்டுடைக் கிராமத்தில் அமைந்துள்ள கட்டுடை வீதியானது குன்றும் குழியுமாக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதனால் அவ் வீதியில் பயணிப்போர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

அதேவேளை வீதி வளைவுகளில் குன்றும் குழியுமாக இருப்பதனால் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள், வாகன சாரதிகள் சிரமத்திற்கு மத்தியில் பயணித்து வரும் நிலையில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுத்து குறித்த வீதியினை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8)

## உதைபந்தாட்ட போட்டிகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதை பந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதை பந்தாட்ட போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு டைமன்ஸ் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி அணியும், 9 மணிக்கு றேஞ் சஸ் அணியை எதிர்த்து வல்வை அணியும், 10 மணிக்கு கொலின்ஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய அணியும், பிற்பகல் 3 மணிக்கு றேஞ் சஸ் அணியை எதிர்த்து மனோ கரா அணியும், பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து அண்ணா சிலையடி அணி யும், பிற்பகல் 5 மணிக்கு கொலின்ஸ் அணியை எதிர்த்து வல்வை அணியும் மோதவுள்ளன. (6-8-90)

## இன, மதங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் யாழில்

(யாழ்ப்பாணம்)

தேசிய சமாதான பேரவை சொண்ட் நிறுவனத்துடன் இணைந்து சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம் சமாதானம் ஆகியவற்றோடு இன ஐக்கியத்தை கட்டி எழுப்பும் நோக்கில், யாழ். மாவட்டத்தில் இன, மதங்களுக்கு இடையிலான பதற்ற நிலை தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட சர்வ மத குழு உறுப்பினர்கள், இளைஞர்கள், உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள் , சமூக மட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடலில் சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செந்துராசா உரையாற்றுகையில், நாம் இனமத நல்லினத்துக்காக சமூக வலைத்தளங்களில் பிரசுரிக்கும் சாதகமான செய்திகள் கூட ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வித்தாக அமையும் என குறிப்பிட்டு இருந்தார்.

அத்தோடு பல மத தலைவர்களும், யாழ். மாவட்ட சர்வ மத குழுவினரும் பங்குபற்றி திட்டத்தின் நன்மை தீமை தொடர்பான தமது கருத்துக்களை பதிவிட்டு இருந்தனர். (6-8)

## மகரஜோதிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஶ்ரீ மலையின் ஐயனார் ஆலய சபரீச ஐயப்பனின் மண்டல பூஜை மகர ஜோதிப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 14.01.2025 ஆம் திகதி வரை (60 நாட்கள்) நடைபெறவுள்ளது என ஆலய தலைவர் அறிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேர்தலில் வாக்களிக்கும் போது புள்ளடியை மட்டுமே பயன்படுத்துங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் வாக்களிக்கும்போது, புள்ளடியை மாத்திரம் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

குறித்த விடயத்தை தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை நடைபெற்ற "ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது 1,2,3 என இலக்கங்கள் அல்லது புள்ளடி பயன்படுத்தப்பட்டன.

எனினும், இன்றைய தினம் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் போதும் விருப்பு வாக்குகளை வழங்கும் போதும் புள்ளடியை மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

எனவே, உரிய முறையை பின்பற்றி அளிக்கும் வாக்கினை செல்லுபடியாகும் வாக்காக வாக்காளர்கள் மாற்ற வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# அதிகரித்த வேட்பாளர்களால் செலவுகள் அதிகம்

## தேர்தல் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

இம்முறை பாராளுமன்றத் தேர்தலுக்கு அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் இருப்பதால், கூடுதல் வாக்கு எண்ணும் மையங்கள், ஆவணப் பணிகள், வாக்குச் சீட்டு அச்சிடுதல் போன்றவற்றில் கூடுதல் செலவுகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் ஏற்ப வாக்குச்சீட்டுகளில் பெரும் வேறுபாடுகள் உள்ளன.

கடந்த முறை 1713 ஆக இருந்த வாக்கு எண்ணும் மையங்களின் எண்ணிக்கை இம்முறை 2034 ஆக அதிகரித்துள்ளது.

இவை அனைத்தும் தேர்தல் அலுவலகத்திற்கு கூடுதல் செலவாகும். இருப்பினும் வாக்குப்பதிவைத் தொடர்ந்து சரியான மதிப்பீடுகள் செய்யப்பட்ட பின்னரே துல்லியமான செலவு உயர்வை அறிய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள 13,421 வாக்களிப்பு நிலையங்களில் இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# முட்டை விலை உயரும் அபாயம்

(கொழும்பு)

முட்டை ஒன்றின் விலை 60 ரூபாய் தொடக்கம் 65 ரூபாய் வரை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உற்பத்தி சார் விலைகள் மும்மடங்கு அதிகரிப்பால் கோழி தீவனத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலையை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஒரு முட்டையின் உற்பத்தி விலை சுமார் 38 ரூபாய் என்றும் ஆனால் விவசாயி ஒரு முட்டையை 30 தொடக்கம் 31 ரூபாய்க்கு ஏழு ரூபாய் நஷ்டத்தில் விற்பனை செய்வதால் பலரும் பண்ணை உற்பத்தியினை கைவிட்டுள்ளனர்.

இந்நிலையில் கிறிஸ்மஸ் பண்டிகையினை முன்னிட்டு முட்டை விலை 60 தொடக்கம் 65 ரூபாய் வரைக்கும் செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வாக்குச் சீட்டுக்களை புகைப்படம் எடுக்க தடை

## தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு முக்கிய அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் தினமான இன்று வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிக்கும் சந்தர்ப்பங்களையும் வாக்குச் சீட்டுக்களையும் புகைப்படம் எடுத்தல், காணொளி எடுத்தல் அல்லது சமூக ஊடக வலைத்தளங்களில் பதிவிடுதல் என்பன தேர்தல் சட்டங்களை மீறும் செயல்களாகும்.

எனவே, இத்தகைய செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அனைத்து சமூக ஊடக வலைத்தள கணக்குகளின் உரிமையாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBM, CIMA, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14917 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14939 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND Computer Engineering, Administration<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், சைவ போசனம்<br>தொ.இ: B/14919 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14941 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ENGINEER (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14920 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31 1/2<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: B.pharm, Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/14943 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கூட்டத்தில் புகுந்த வாகனம்!

❖ 35 பேர் உயிரிழப்பு
❖ 43 பேர் படுகாயம்
❖ சீனாவில் துயரம்



(பீஜிங்)

சீனாவின் ஜுஹாய் நகரில் உள்ள மைதானத்திற்கு வெளியே உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவர்கள் மீது வாகனம் மோதியதில் 35 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் 43 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

விபத்தை ஏற்படுத்திய சாரதி தற்போது கோமா நிலையில் இருப்பதாகவும் இதன் காரணமாக விபத்து தொடர்பில் வாக்குமூலம் பெற முடியாமல் பொலிஸாரினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## தீவிரவாதிகள் சுட்டுக்கொலை
## மணிப்பூரில் பதற்றம்

(டில்லி)

இந்தியாவின் மணிப்பூரில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 11 பேர் நேற்று கொல்லப்பட்டனர். இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த குகி-ஜோ கவுன்சில் நேற்றுக் காலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தது.

இதையடுத்து கடைகள் அடைக்கப்பட்டு மாநிலத்தின் பல பகுதிகளிலும் வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

இதனிடையே 11 பேர் கொல்லப்பட்டதற்கு எதிராக நேற்று முன்தினம் மாலை, இம்பால் மேற்கு மற்றும் இம்பால் கிழக்கு மாவட்டங்களில் பல்வேறு கிராமங்களில் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இம்பால் பள்ளத்தாக்கில் பல இடங்களில் மோதலில் ஈடுபடும் இரு தரப்பிலிருந்தும் ஆயுதம் ஏந்திய குழுக்கள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன் காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.


பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் கூடுதலான படைகள் குவிக்கப்பட்டுள்ளன. மேலும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களை கண்டறியும் பணிகளையும் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# அயோத்தி ராமர் கோயில் மீது தாக்குதல் நடத்துவோம்

## காலிஸ்தான் மிரட்டல்

**(டில்லி)**

**அயோத்தியில் உள்ள ராமர் கோயில் மற்றும் இதர இந்து கோயில்கள் மீது வரும் 16, 17 ஆம் திகதிகளில் தாக்குதல் நடத்துவோம் என காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் மிரட்டல் விடுத்துள்ளார்.**




காலிஸ்தான் தனி நாடு கோரி வரும் சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு (எஸ்எப்ஜே) வெளிநாடுகளில் இருந்து செயற்பட்டு வருகிறது. இந்தியாவில் தடை செய்யப்பட்ட இந்த அமைப்பு இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

இதன் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னுன் தான் பேசும் ஒரு வீடியோவை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். அதன் பின்னணியில் அயோத்தி ராமர் கோயிலில் பிரதமர் மோடி பிரார்த்தனை செய்யும் படங்கள் இடம்பெற்றுள்ளன.

அதில் அவர் கூறும் போது "வரும் 16, 17 ஆம் திகதிகளில் இந்து கோயில்கள் மீது தாக்குதல் நடத்துவோம். அயோத்தியில் வன்முறை வெடிக்கும். இந்துத்துவா சித்தாந்தத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்வோம். வன்முறை இந்துத்துவா சித்தாந்தத்தின் பிறப்பிடமான அயோத்தியில் உள்ள ராமர் கோயிலின் அடித்தளத்தை தகர்ப்போம்.

கனடாவின் மிசிசவுகாவில் உள்ள காளிபரி கோயிலில் 16 ஆம் திகதியும் பிராம்ப்டனின் திரிவேணி கோயிலில் 17 ஆம் திகதியும் நடைபெறவுள்ள வாழ்நாள் சான்றிதழ் முகாமில் இந்திய தூதரக அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்துவோம். எனவே கனடாவாழ் இந்தியர்கள் இந்த முகாமில் பங்கேற்க வேண்டாம்.

கனடாவில் உள்ள பல இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சித்தாந்தத்தை கடைபிடிக்கின்றனர். கனடா எம்.பி. சந்திர ஆர்யா இந்து தீவிரவாதத்தின் முகமாக விளங்குகிறார். அவர் கனடாவுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அல்லது அங்கிருந்து அவர் உடனடியாக வெளியேற வேண்டும்" என்றார்.

கனடாவின் பிராம்ப்டன் நகரில் உள்ள இந்து கோயிலில் இந்துக்கள் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் கடந்த வாரம் தாக்குதல் நடத்தினர். இது தொடர்பாக எஸ்எப்ஜே முக்கிய நிர்வாகி இந்தர்ஜீத் கோசலை கனடா பொலிஸார் கைது செய்தனர். இந்நிலையில் பன்னுன் மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குகளை அடையும் வரை போர்நிறுத்தம் இல்லை

## இஸ்ரேலின் அறிவிப்பால் நீடிக்கும் பதற்றம்

(பெய்ரூட்)

**இஸ்ரேலின் புதிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் போரின் இலக்குகளை அடையும் வரை லெபனானில் ஹிஸ்புல்லாக்களுடன் போர் நிறுத்தம் இருக்காது என்று தெரிவித்துள்ளார்.**



தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் கணக்கில் பதிவொன்றை வெளியிட்டிருந்த கட்ஸ், "வெற்றியின் பலனை உணரும் வகையில் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, "லெபனானில் போர் நிறுத்தம் இருக்காது, ஓய்வும் இருக்காது" என்று அந்த பதிவில் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், கடந்த திங்களன்று இஸ்ரேலியத் தலைவர்கள் லெபனானில் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாரம் வெளியுறவு அமைச்சகத்தில் கட்ஸ்க்கு பதிலாக வெளியுறவு மந்திரி கிடியோன் சார், இஸ்ரேல் இந்த பிரச்சினையில் அமெரிக்காவுடன் செயற்படுவதாகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் பிற்பகுதியில் இருந்து லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் அதன் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இதேவேளை தீவிர வான்வழித் தாக்குதல்களுக்குப் பிறகு செப்ரெம்பர் 30 அன்று தரைவழி தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், ஒக்டோபர் 7, 2023 அன்று தெற்கு இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய கொடிய தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக இஸ்ரேல் தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது.

எனினும் இஸ்ரேலுடனான மோதலில் பெரும் தலைவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டு பேரிழப்புக்களை ஹிஸ்புல்லாக்கள் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# புடினுடன் பேசிய ட்ரம்ப் மறுப்பு தெரிவித்த ரஷ்யா



(மொஸ்கோ)

47 ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பேசியதாக வெளியான செய்திகளை கிரெம்ளின் கடந்த திங்களன்று மறுத்துள்ளது.

தற்போது ட்ரம்புடன் பேசுவதற்கு புடினுக்கு எந்த திட்டமும் இல்லை என்று கிரெம்ளின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

ட்ரம்ப் மற்றும் புடினுக்கு இடையிலான தொலைபேசி உரையாடல் கடந்த வியாழன் அன்று நடந்ததாக வோஷிங்டன் போஸ்ட் முதலில் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த உரையாடலின் போது, டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் போரை அதிகரிக்க வேண்டாம் என்று புடினுக்கு அறிவுறுத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அந்த தகவலை தற்சமயம் மறுத்துள்ள ரஷ்யா, அது வெறும் கட்டுக்கதை என்று சுட்டிக்காட்டியுள்ளது. (நி-8)

# விமானத்தின் மீது துப்பாக்கிச் சூடு

## ஹெய்ட்டிக்கான விமான சேவைகள் இரத்து

(ஹெய்ட்டி)

அமெரிக்காவிலிருந்து பயணித்த பயணிகள் விமானம் ஒன்று ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் அமைந்துள்ள விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளது.

புளோரிடாவில் உள்ள போர்ட்லாடர்டேலில் இருந்து வருகை தந்த ஸ்பிரிட் ஏர்லைன்ஸின் 951 விமானம் மீதே துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் விமானத்திலிருந்த பணிப்பெண்ணுக்கு சிறுகாயம் ஏற்பட்டது. எனினும் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

எவ்வாறெனினும் குறித்த விமானம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பின்னர் அண்டை நாடான டொமினிகன் குடியரசிற்கு திருப்பி விடப்பட்டது.

மூன்று வாரங்களில் ஹெய்ட்டியின் தலைநகருக்கு மேல் பறந்த விமானத்தின் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

தற்போது அரசியல் கொந்தளிப்பில் சிக்கித் தவிக்கும் ஹெய்ட்டிக்கான விமான சேவைகளை பல நிறுவனங்கள் இரத்து செய்துள்ளன.

ஆயுதமேந்திய கும்பல்களாலும் அதிகரித்து வரும் வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டில் புதிய பிரதமர் பதவியேற்றுள்ள நிலையில் இந்த சம்பவங்கள் நடந்துள்ளன. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடையோருக்கு சிறப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வாக்கெடுப்பு நிலையத்தினுள் தங்களது வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல சட்டரீதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வரத் தேவையான போக்குவரத்து வசதிகளை தங்களது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

வாக்கெடுப்பு நடைபெறுகின்ற கட்டடத்தின் தூரம் 100 மீற்றருக்கும் அதிகமாக இருப்பின் வாக்கெடுப்பு நிலையத்திற்கு முச்சக்கரவண்டியில் செல்ல முடியும்.

வாக்கை அடையாளமிட முடியாதவர்களுக்கு வாக்குச் சீட்டிற்கு வழிகாட்டும் தொடுகை சட்டகம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குச் செல்லுபடியான அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க முடியும்.

வாக்கெடுப்பு நிலையத்தின் வளாகத்தில் காட்சிப் படுத்தப்படுகின்ற அறிவித்தல்களைச் சைகை மொழி மூலமான உருவப் படங்களுடன் காட்சிப்படுத்தல்.

தேர்தல் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகளை வெளியிடும் போது சைகை மொழி பெயர்ப்புடன் வெளியிடல் போன்ற விடயங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 250 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 350 | 250 |
| தக்காளி | 320 | 320 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 100 | 240 | 150 |
| கோவா | 200 | 200 | 250 | 200 |
| கரட் | 150 | 200 | 250 | 240 |
| பூசணி | 100 | 100 | 280 | 150 |
| புடோல் | 120 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 400 | 280 | 250 | 300 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 800 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 250 |
| லீக்ஸ் | 200 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 140 | 180 | 200 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 350 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 200 | 400 | 180 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 120 | 150 |
| தேசிக்காய் | 400 | 500 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-170 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 1600 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 400 | 500 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 80 |
| ஈரப்பலா | 120 | 160 | 60 | 150 |

# இன்று ஒரு தகவல் 263



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## முதுமையில் இன்பம்

ஒரு வயதான தாத்தா வயதான காலத்தில் கூட எதையும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார். எதைக் கொடுத்தாலும் சாப்பிட்டு ஜீரணம் செய்துவிடுவார். அவர் உடம்புவாகு அப்படி? என்ன தாத்தா இது? தள்ளாடும் வயதிலே இப்படி கண்டதையெல்லாம் சாப்பிடலாமா? என்று கேட்டார். இது எதையுமே தள்ளாத வயசுடா கண்ணே என்று சினிமா வசனம் பேசுவார். அது சரி வயதான காலத்திலே எல்லோரும் இப்படி உற்சாகமாக இருக்க முடியுமா? முடியும் என்று சொல்கிறார்கள் முதியோர் நல மருத்துவ நிபுணர்கள்.

சரி அதற்கு என்ன செய்யலாம்? என்று கேட்டால் 50 வயதிலேயே அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விடவேண்டும் என்றார். முதுமை என்பது எங்கள் எல்லோருக்கும் வந்தே தீரக்கூடிய ஒன்று. எனக்கு அது வேண்டாம் என்று யாரும் சொல்ல முடியாது. சொன்னாலும் அது ஒதுங்கி போய்விடாது. அப்படி என்கின்ற போது அந்த கடைசி காலத்திலே சந்தோஷமாக இருப்பதற்கு வழி இருக்கின்றது என்று சொன்னால் அதை தெரிந்து வைத்துக் கொள்வதில் தவறே இல்லையே. முதுமையில் இன்பமாக வாழ்வதற்கு வழி என்ன என்று கேட்டால் அதற்கு மூன்று குறிப்புக்கள் சொல்கின்றார்கள். ஒன்று உடல் நலம். இரண்டாவது மனநலம். மூன்றாவது குடும்பத்திலேயும் சமுதாயத்திலேயும் நல்ல இடம். இவ்வளவும் தான். முதலிலே உடல் நலத்தை எப்படி காப்பாற்றுவது என்று பார்ப்போம். வயதான காலத்திலே பசியும் சுவையும் குறையும். அதனாலே சாப்பிடும் உணவின் அளவும் குறையும். இப்படி நிலைமை இருப்பதனால் சாப்பிடுகின்ற சிறிது உணவும் சத்துள்ள உணவாக இருக்க வேண்டியது அவசியம்.

வயதான காலத்திற்கு கேழ் வரகுராகி மிகவும் பொருத்தம். இதிலே கலோரிகள் அதிகம். சுண்ணாம்புச் சத்தும் அதிகம். நார்ச்சத்தும் அதிகம். சுலபமாக செரிக்கும். விலையும் மலிவு. கோதுமை, கீரை, பருப்பு வகை, பழங்கள் இதெல்லாம் சாப்பிடலாம். பொட்டுக்கடலை, பட்டாணி இதிலே எல்லாம் புரதச்சத்து அதிகம். வயதான காலத்திலே இரத்த சோகை வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அதனாலே இரும்புச் சத்து அதிகமாக இருக்கின்ற உணவாகப் பார்த்து சாப்பிட வேண்டும். கீரை வகையிலே அது நிறைய இருக்கிறது. அதனாலே தினம் ஒரு வகை கீரை தவறாமல் சேரத்துக் கொள்ள வேண்டும். வெல்லம், பேரீச்சம்பழம், தேன், கல்லீரல் இதிலே எல்லாம் கூட இரும்புச்சத்து அதிகமாக இருக்கிறது. முதுமையிலேயே எலும்பு பலவீனமாக இருக்கும். அதனாலே சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ள உணவையும் சாப்பிட வேண்டும். பாலிலே அந்தச் சத்து அதிகம். முருங்கைக் கீரை, வெந்தயக் கீரை, கேழ் வரகு இவைகளிலே எல்லாம் அது அதிகம். வயதான காலத்திற்கென்று தனியான உணவு இல்லை. சாப்பிடுவது சத்துள்ளதாக இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம்.

அடுத்த படியாக உடற்பயிற்சி மிகவும் அவசியம் அதனாலே உடம்பும் மனதும் நன்றாக இருக்கும். முடிந்த அளவுக்கு தினமும் 45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யலாம். இல்லையென்றால் தினமும் மூன்றிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரம் நடக்கலாம். அதற்கு முன்னால் வைத்தியரிடம் யோசனை கேட்பது நல்லது.

காலாகாலத்திலே மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது அவசியம். இதெல்லாம் உடம்பு நன்றாக இருப்பதற்கு. இரண்டாவது மன நலம் வயதாகிவிட்டது என்று நினைத்து சும்மா உட்கார்ந்திருக்கக் கூடாது. அப்படி முடங்கிக் கொண்டிருந்தால் மூப்போட விளைவு ஆறு மடங்கு அதிகமாகிவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் சொல்கிறார்கள். நடுத்தர வயது காலத்திலே நமக்கென்று ஒரு நல்ல பொழுது போக்கு பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். புத்தகம் படிப்பது. றேடியோ கேட்பது நண்பர்களைக் கண்டு உரையாடுவது இப்படி ஏதாவது இருக்க வேண்டும். முதுமைக்கு முக்கியமான விரோதி தனிமை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டிலே சின்னச் சின்ன வேலைகளைச் செய்யலாம். மன நலம் நன்றாக இருக்க தியானம் ஒரு நல்ல மருந்து. மூன்றாவது விடயம் குடும்பத்திலேயும் சமூகத்திலேயும் ஒரு நல்ல இடத்தைப் பெற வேண்டும். கூட்டுக் குடும்பம் தான் நல்லது. குடும்பத்திலே இருப்பவர்கள் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்கள் அனுபவமே ஒரு பெரிய சொத்து. நேரம் கிடைக்கின்ற பொழுதெல்லாம் கலகலப்பாக பிரியமாகப் பேசிக் கொள்ள வேண்டும். பெரியவர்கள் யோசனையைக் கேட்டு நடந்து கொள்வது தான் என்றைக்கும் நல்லது. நடுத்தர வயது காலத்திலேயே வயதான காலத்திற்கென்று சிறிது பணத்தை சேமிக்க ஆரம்பித்துவிட வேண்டும். மற்றவர்களை நம்பி இருந்து விடக்கூடாது. பணம் கையிலே இருந்தால் பாசம் தானாக நெருங்கிவரும். மூப்பியம் மருத்துவம் என்பது இப்போது மிகவும் முக்கியமான ஒரு மருத்துவப் பிரிவு.

சென்னை அரசு பொது மருத்துவமனையிலே இதற்கு என்று ஒரு தனிப்பிரிவே இருக்கிறது. இந்தியாவிலே இதற்கென்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற முதல் பிரிவே இது தான் இங்கே இருக்கின்ற வைத்தியர் தான் இவ்வளவு விவரங்களையெல்லாம் சொன்னார். அதனாலே வயது வரவர அதிகமாகிக் கொண்டே வருகிறது என நினைத்து யாரும் கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்களுக்கு மட்டுமா அப்படி நடக்கிறது. எல்லோருக்கும் தான். வயதான காலத்திலேயும் உற்சாகமாக இருக்கிறவர்கள் பல பேரைப் பாருங்கள். அவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு தாத்தாவிற்கு நூறாவது பிறந்தநாள் அவருடைய பேரப்பிள்ளைகள் எல்லாம் வந்து அவருடைய காலிலே விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். காலிலே விழுந்து எழுந்திரிச்சதும். தாத்தா ஆண்டவன் புண்ணியத்தினாலே அடுத்த வருடமும் உங்கள் பிறந்த நாள் அன்றைக்கு உங்கள் ஆசீர்வாதத்தைப் பெறக்கூடி பாக்கியம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று மிகவும் பணிவாகக் கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு அந்தத் தாத்தா கவலைப்படாதீர்கள். நிச்சயமாக அது நடக்கும். ஏனென்றால் நீங்கள் எல்லாம் சின்னப்பிள்ளைகள் தானே. அதற்குள்ளே உங்களுக்கு ஒன்றும் ஆகிவிடாது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி தேர்தல் மாவட்டம் 107 முறைப்பாடுகள் பதிவு

(குருமன்காடு)

வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 107 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும், வவுனியா அரச அதிபருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் கடமைகளுக்காக வன்னியில் 4995 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 3898 பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் 50 முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் 22 முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது. அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளது. (6-8-250)

# மேய்ச்சல் தரைகள் ஆக்கிரமிப்பு தொடர்பில் மகஜர் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் பகுதியில் உள்ள மேய்ச்சல் தரைகள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பாக நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநரிடம் நானாட்டான் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நானாட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.எம். நிஹால் கருத்துத் தெரிவிக்கையில்,

"2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள். இவற்றுக்குரிய மேய்ச்சல் தரை காணி ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அவை எங்களிடம் கையளிக்கப்படவில்லை.

மேய்ச்சல் தரைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடங்களைச் சிலர் சட்டவிரோதமாகக் காடழிப்பு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எனவே, இந்தப் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளோம். ஆளுநர் எதிர்வரும் 21ஆம் திகதி மன்னார் நானாட்டான் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக எங்களிடம் தெரிவித்ததாக கூறியிருந்தார். (6-8)

# போலி இலக்கத் தகடுகளுடன் இரு வாகனங்கள் மீட்பு

(கொழும்பு)

கண்டியில் இரு வெவ்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்ட இரண்டு வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கண்டி பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, கண்டி - அஸ்கிரிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட ஜீப் வாகனம் ஒன்றும் அதன் உரிமையாளர் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளரை பதவி நீக்க பரிந்துரை

(கொழும்பு)


இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வாவை குறித்த பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யுமாறு சர்வதேச ஒலிம்பிக் குழு கோரியுள்ளது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் ஒழுக்காற்றுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேசிய ஒலிம்பிக் குழுவின் நிர்வாக குழுவை அவசரமாகக் கூட்டி, தாமதிக்காமல் உரிய நடவடிக்கையை எடுக்குமாறு இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியத்துக்கு, சர்வதேச ஒலிம்பிக் குழு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# டிப்பர்-முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

## மூவர் படுகாயம்



(கொழும்பு)

ஹொரணை - கொழும்பு பிரதான வீதியில் கொனபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத் தில் தாய் உயிரிழந்துள்ள துடன் தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிப்பர் வாகனம் ஒன்று முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது முச்சக்கரவண்டியில் பயணித்த தாயும் தந்தையும் இரண்டு பிள்ளைகளும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தாய் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த தந்தையும் இரண்டு பிள்ளைகளும்களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவர்கள் நால் வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக குடும்பத்துடன் தங்களது சொந்த ஊருக்கு முச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# கொக்கெய்னுடன் வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

13 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப்பிரிவினரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

Sierra Leone நாட்டிலிருந்து கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பயணியொருவர் குறித்த கொக்கெய்ன் தொகையை விழுங்கிய நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். 32 வயதான ஒருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, அவர் விழுங்கியிருந்த கொக்கெய்ன் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ரி-8)

# தொழில் வாய்ப்புகளுக்கு கொரியா சங்கம் உதவி



(கொழும்பு)

விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்வாய்ப்புகளுக்கு கொரியாவின் சிறிய அளவிலான தொழில் முயற்சிகள் சங்கம் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது.

கொரியாவின் சிறிய அளவிலான வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி வழங்குவதற்கான வசதி அளிக்கவும் கொரியா சிறிய அளவிலான தொழில் முயற்சிகள் சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலில் கொரியாவில், மீன்பிடித் தொழிலுக்காக இலங்கைத் தொழிலாளர்களுக்கு இலங்கையில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் கொரியா சிறிய அளவிலான தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் கிம் சுங் ரோங் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

# அறுகம்பே பகுதிக்கான பயணத்தடை நீக்கம்

## அமெரிக்க தூதரகம்

(கொழும்பு)

அறுகம்பே பகுதிக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை அறுகம்பே தாக்குதல் திட்டம் குறித்து இந்திய புலனாய்வு அமைப்புகளால் இலங்கை பாதுகாப்புப் படையினருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது

அதன்படி அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலுக்கு அருகில் அமைந்துள்ள அறுகம்பே, பயணம் செய்பவர்கள் அடிக்கடி வரும் உலகின் மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும்.

அந்தப் பகுதி இஸ்ரேலியர்கள் அதிகம் கூடும் பகுதியும் கூட. இவ்வாறானதொரு பின்னணியில் அறுகம்பே பகுதியில் தங்கியுள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் இருப்பதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் அந்நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு அறிவித்திருந்த நிலையில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் இவ்வாறு அறிவித்துள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 630





யனுடைய ஆபத்துதவிகள் சிலர் சோழகுலத்தைப் பூண்டோடு அழிக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரிய பழுவேட்டரையருடைய பொக்கிஷத்திலிருந்து புதிய தங்கக்காசுகள் போய்க்கொண்டிருக்கின்றன. இதைக் காட்டிலும் இன்னும் ஏதேனும் நான் இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?"

"வேண்டாம்" என்று முணுமுணுத்தாள் குந்தவை. சூடாமணி விஹாரத்தில் சுரத்துடன் படுத்திருக்கும் இளவரசனின் நினைவு அவளுக்கு வந்தது. பொன்னியின் செல்வனையும் அபாயங்கள் சூழ்ந்திருக்கலாம் அல்லவா?

குந்தவை பெருமூச்சுவிட்டாள் முதன் மந்திரி கூறுவது எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை அவள் உணர்ந்தாள். எல்லா விவரங்களும் அறிந்து அவர் சொல்கிறாரா, அல்லது இராஜாங்க நோக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு சொல்கிறாரா என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

"ஐயா! அவர்களுடைய சந்திப்பைத் தடுப்பது அவ்வளவு முக்கியமான காரியம் என்று ஏன் கருதுகிறீர்கள்!" என்று கேட்டாள்.

"அம்மணி! வீரபாண்டி

"ஐயா! சோழநாட்டுக்கு விபத்துக்கு மேல் விபத்தாக வந்து கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தாங்கள் முதன் மந்திரியாயிருப்பது அதிஷ்டவசந்தான்! என் தம்பியின் விடயமாக என்ன ஏற்பாடு செய்தீர்கள்?" என்று கேட்டாள்.

"சோழ நாட்டிலுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் விஷ்ணு, ஆலயங்களிலும் இளவரசருடைய சுகக்ஷேமத்தைக் கோரிப் பிரார்த்தனை செய்து அர்ச்சனை அபிஷேகம் நடத்தச் சொல்லியிருக்கிறேன். அப்படியே புத்த விஹாரங்களிலும், சமணப் பள்ளிகளிலும் பிரார்த்தனை செய்யப் போகிறார்கள். நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தில் புத்த பிக்குக்கள் ஒரு மண்டலம் விசேடப் பிரார்த்தனை நடத்தப் போகிறார்கள். வேறு என்ன செய்யலாம் என்று நீ சொல்கிறாய்?"

சூடாமணி விஹாரத்தைப் பற்றிச் சொல்லும் போது முதன் மந்திரியின் முகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்படுகிறதா என்று குந்தவை கவனித்தாள், ஒன்றுமே தெரியவில்லை.

"ஐயா! சூடாமணி விஹாரம் என்றதும் ஒரு விடயம் ஞாபகம் வருகிறது. சூடாமணி விஹாரத்தின்மீது பெரிய பழுவேட்டரையர் ஏதோ கோபம் கொண்டிருக்கிறாராம். இலங்கையில் பிக்குக்கள் இளவரசருக்கு முடிசூட்டுவதாகச் சொன்ன செய்தி வந்ததிலிருந்து அந்தக் கோபம் முற்றியிருக்கிறதாம். இளவரசர் காணாமற் போனதற்குப் பழியைச் சூடாமணி விஹாரத்திலுள்ள பிக்குக்களின் மீது சுமத்தினாலும் சுமத்துவார்கள். அதற்குத் தக்க பாதுகாப்பு, தாங்கள்தான் செய்யவேண்டும்" என்று சொன்னாள்.

"உடனே செய்கிறேன், அம்மா! சக்கரவர்த்தியின் கட்டளையுடன் சூடாமணி விஹாரத்தைப் பாதுகாக்க ஒரு சிறிய சைன்யத்தையே வேணுமானாலும் அனுப்பி வைக்கிறேன். வந்தியத்தேவனைக் காஞ்சிக்கு அனுப்புவது பற்றி என்ன சொல்கிறாய்?"

"ஐயா! அவ்வளவு முக்கியமான காரியத்துக்கு வேறு யாரையாவது அனுப்புவது நல்லதல்லவா?"

"உனக்கு மட்டும் அவனிடம் நம்பிக்கையிருந்தால் அவனையே அனுப்ப விரும்புகிறேன். அவனுடைய வீர சாகசச் செயல்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

# ஒரு மூதாட்டியின் கதை

வயது முதிர்ந்த மூதாட்டி ஒருத்தி உணவு விடுதி நடத்திவந்தாள். காலையில் அவள் விடுதியில் கிடைக்கும் அப்பம் மிகமிகச் சுவையானதாக இருக்கும். அந்த விடுதிக்கு வரும் அனைவரும் அதனை விரும்பிக் கேட்டுவாங்கி உண்பர்.

அப்பத்துக்குச் சர்க்கரையும் பாலும் துணைப் பொருட்களாக அளிப்பாள்.

ஒரு சமயம் சர்க்கரை விலை சற்றுக் கூடியது. அப்பத்திற்குப் பெறுகிற விலைக்குச் சர்க்கரை கொடுப்பது அம்மூதாட்டிக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது.

அதிகவிலை கொடுத்துச் சர்க்கரை வாங்கினாலும், அப்பத்தின் விலையைக் கூட்ட அவள் விரும்பவில்லை. எனவே, அப்பத்திற்குச் சர்க்கரை இல்லை எனக் கூற விரும்பினாள்.

கடைக்கு வழக்கமாக வந்து சாப்பிடும் ஒருவரை அழைத்து. அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என அறிவிப்பு அட்டை ஒன்றை எழுதிவரச் சொன்னாள். அவர் அதன் அடிப்படையில் இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என ஓர் அறிவிப்பு அட்டை எழுதி வந்தார். அம்மூதாட்டி அதனைக் கடையில் தொங்கவிட்டாள்.

காலையில் சாப்பிட வந்த ஒருவர் ஓர் அப்பம் வாங்கிச் சாப்பிட்டார். சர்க்கரை இல்லாமலே சாப்பிட்டார். இரண்டாவதாக ஓர் அப்பம் கேட்டார். அவள் இரண்டாவது அப்பம் கொடுத்தாள். அவர் அம்மா! அப்பத்துக்கு சர்க்கரைக் கொடு எனக் கேட்டார்.

அம்மூதாட்டி அறிவிப்புப் பலகையைப் பார்த்தீர்களா?" என்று கேட்டாள். அப்பம் வாங்கியவர் பார்த்தேன். படித்தேன். அதன் பிறகுதான் சர்க்கரை கேட்டேன் என்று கூறினார்.

அதைப் படித்து விட்டுமா கேட்கிறீர்? என்றாள் அம் மூதாட்டி



ஆமாம்... அறிவிப்பு அட்டையில் என்ன எழுதி இருக்கிறது? இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என்றுதானே எழுதியிருக்கிறது. இரண்டாவது அப்பத்துக்குத்தானே நான் சர்க்கரை கேட்கிறேன் என்றார்.

ஐயா! அப்படியா பொருள் கொள்கிறீர்கள்? சரி! உங்களுக்கு இன்று சர்க்கரை கொடுத்து விடுகிறேன். நாளை அறிவிப்பு அட்டையில் எழுதியிருப்பதை மாற்றி விடுகிறேன் என்று கூறினாள்.

அறிவிப்பு அட்டை எழுதியவரை அழைத்தாள். ஐயா, அறிவிப்பு அட்டையில் அப்பத்துக்கு இன்று முதல் சர்க்கரை இல்லை என எழுதிவிடுங்கள் என்றாள். அந்த நாள் முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இன்றி விற்கத் தொடங்கினாள். காலைச் சிற்றுண்டிச் சிக்கல் இவ்வாறு தீர்ந்தது.

பகலுணவு வழங்குவதில் ஒரு புதிய சிக்கல் ஏற்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்காளப் பெருமக்களே! வாக்களிப்பது உங்கள் கடமை

நாட்டின் 10ஆவது பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இந்த நாட்டின் பாராளுமன்ற ஆட்சியை இத்தேர்தல் தீர்மானிக்கப் போவதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இத்தேர்தலே நிர்ணயிக்கும்.

ஆக, ஆட்சியாளர்கள் யார்? எதிர்க்கட்சி எது? மக்கள் பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவர்? என்பதைத் தீர்மானிக்கப் போபவர்கள் இந்த நாட்டின் வாக்குரிமை பெற்ற பொதுமக்களே.

ஆம், இன்று நடைபெறுகின்ற பொதுத் தேர்தலில் அனைத்துப் பொதுமக்களும் வாக்களிப்பது மிகவும் கட்டாயமானது என்பதுடன் அஃது பொதுமக்களின் தவிர்க்க முடியாத கடமையுமாகும்.

அதேநேரம் நீங்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்குகளும் பெறுமதியானவை.

எனவே அந்த வாக்குகள் சரியான முறையில் அளிக்கப்பட வேண்டும்.

எனினும் கடந்த காலங்களில் செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை உயர்வாக இருப்பதைப் புள்ளிவிபரங்கள் உறுதி செய்கின்றன.

இந்தநிலைமை மிகவும் துரதிர்ஷ்டமானது. இலங்கையைப் பொறுத்தவரை எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் என்ற எல்லைப்படுத்தலை சுட்டி நிற்கின்ற கல்வியறிவு வீதம் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறப்பாக உள்ளது.

இருந்தும் வாக்களிப்பின்போது, செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாக இருப்பதான தகவல்கள் வேதனை தருவதாகும்.

ஆகவே இந்த நாட்டின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தீர்மானிக்கப் போகின்ற பொதுத் தேர்தலின்போது, வாக்களிக்கின்ற அனைத்துப் பொதுமக்களும் வாக்களிப்பது எப்படி என்பதைத் தயவுசெய்து அறிந்து கொண்டு, வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுங்கள்.

வாக்களிக்கின்ற முறையை உங்கள் குடும்ப உறவுகளிடம் கேட்டறியுங்கள். நீங்கள் செல்கின்ற வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பது பற்றிய அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அதைத் தயவு செய்து ஒரு தடவை பார்த்துவிட்டு வாக்களியுங்கள்.

அதிலும் நீங்கள் வாக்களிக்க விரும்புகின்ற சின்னங்கள் வாக்குச்சீட்டில் இருக்கக் கூடிய இடத்தை அவதானியுங்கள்.

உங்களின் அவதானம் வாக்களிப்பின் போது நீங்கள் சின்னத்தைத் தேடுகின்ற நேரத்தை மீதப்படுத்துவதுடன் தேவையற்ற பதட்டத்தையும் குழப்பத்தையும் தவிர்ப்பதாக இருக்கும்.

எனவே இன்று நடைபெறுகின்ற பொதுத் தேர்தல் அமைதியாகவும் வாக்களிப்பு வீதம் முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகமாகவும் செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் அமையட்டும். இறைவனின் திருவருளும் உதவட்டும்.

## வாக்களிப்பு நிலையங்களுக்கான தூரத்திற்கு அமைய ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குக

### தொழில் அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்கள் அமைந்துள்ள தூரத்திற்கு அமைய ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்குமாறு அனைத்து தனியார் சேவை வழங்குநர்களிடமும் தொழில் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தொழிலாளர் திணைக்களம் ஆகியன ஏற்கனவே அறிவித்துள்ளதாகத் தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பணியிடத்திலிருந்து 40 கிலோமீற்றர் அல்லது அதற்கும் குறைவான தொலைவில் வாக்களிப்பு நிலையம் அமைந்திருந்தால் அரைநாள் விடுமுறையும், 40 முதல் 100 கிலோமீற்றர் தொலைவில் வாக்களிப்பு நிலையம் அமைந்திருந்தால் ஒரு நாள் விடுமுறையும் அளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பணியிடத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்ல 100 முதல் 150 கிலோமீற்றர் தூரம் காணப்படுமாயின் ஒன்றரை நாள் விடுமுறைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என தொழில் அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

150 கிலோமீற்றருக்கு அதிக தூரமாயின் 2 நாட்கள் விடுமுறைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என தொழில் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள தேர்தலுக்காக பணியிடத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு வேதனத்துடன் கூடிய விசேட விடுமுறை வழங்கவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## காலியில் வாள்வெட்டு மீனவர் உயிரிழப்பு

காலி, ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மிஹிரிபென்ன பிரதேசத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தில் வாள்வெட்டுத்தாக்குதலுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை (13) காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் காலி, மிஹிரிபென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய மீனவர் ஒருவர் ஆவார்.

முன்விரோதம் காரணமாக மீன்பிடித் துறைமுகத்திற்குச் சென்ற இனங்காணாத மூவரால் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## களுத்துறையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(களுத்துறை)

களுத்துறை பதுரலிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொஸ்குலன பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பதுரலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) மாலை இடம்பெற்றுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் புலத்சிங்கள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொஸ்குலன பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் ஆவார்.

இதனையடுத்து பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுரலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2024**

**“மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும் ”**

[illegible]

## முன்னாள் அமைச்சர்களின் இல்லங்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் முன்னாள் அமைச்சர்கள் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

அதற்கமைய, 30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர், மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் தகுதியானவர்களிடம் ஒப்படைக்கும் வரை இந்தப் பாதுகாப்புத் திட்டம் அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## குளவி கொட்டியதில் தொழிலாளர் மரணம்

(கொழும்பு)

புஸ்ஸல்லாவை - மெல்பத்வத்த பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் மீது குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குளவி கொட்டுக்கு இலக்காகி ஆறு பேர் காயமடைந்து கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மெல்பத்வத்த, புஸ்ஸல்லாவ பகுதியில் வசிக்கும் 50 வயதுடையவராவார்.

ஆபத்தான நிலையில் உள்ள ஒருவர் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஏனைய 04 பேர் சிகிச்சை பெற்று வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளனர். (ம-7)

## ஏ.ரி.எம் இயந்திரத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டு

### பொலிஸ் ஒருவர் பணி நீக்கம்

(கொழும்பு)

ஏ.ரி.எம் இயந்திரத்தில் வங்கி அட்டை சிக்கியதால் ஆத்திரமடைந்து ஏ.ரி.எம் இயந்திரத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொது ஒழுங்கு முகாமைத்துவப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பு திபிரிகசாய பிரதேசத்தில் அமைந்துள்ள அரச வங்கி ஒன்றின் ஏ.ரி.எம் இயந்திரத்தில் பணம் எடுக்கச் சென்ற சந்தேகநபர், மதுபோதையில் இருந்ததால், கார்ட் தடைப்பட்டு, பணம் எடுக்க முடியாமல் ஏ.ரி.எம் இயந்திரத்தைத் தாக்கி அதனை சேதமாக்கியுள்ளார்.

நாரஹேன்பிட்டி பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபரான சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொது ஒழுங்கு முகாமைத்துவப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சந்தேகநபரான சார்ஜனை நேற்று முன்தினம் (12) முதல் பணி இடைநிறுத்தம் செய்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அதற்கமைய, 30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர், மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் தகுதியானவர்களிடம் ஒப்படைக்கும் வரை இந்த பாதுகாப்பு திட்டம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# தீயணைப்பு வீரர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை கருத்திற் கொண்டு ஏதேனும் அவசரச் சூழலை எதிர்கொள்ளும் வகையில் கொழும்பு தீய ணைப்பு சேவை திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகள் நாளை வரை இரத்து செய்யப்படுவதாக பிராந்திய தீயணைப்பு அதிகாரி ரோஹன நிஷாந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

இதன்படி, தீயணைப்பு சேவை திணைக்கள தலைமையகம், ஹெட்டியாவத்தை, க்ரேன்ட்பாஸ், வெள்ளவத்தை கோட்டை மற்றும் மடிவெல உப நிலையங்களில் உள்ள சுமார் 300 ஊழியர்களின் விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது.

பிரதான வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் கொழும்பு றோயல் மற்றும் டி.எஸ். சேனநாயக்க கல்லூரி மைதானங்களில் உப சேவை நிலையங்களுக்கு மேலதிக மாக இரண்டு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் இரண்டு அம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஏறக்குறைய 50 தீயணைப்பு வாகனங்கள், 12 உயிர்காக்கும் வாகனங்கள் மற்றும் 5 அம்புலன்ஸ்கள் எந்த நேரத்திலும் அனுப்பி வைக்க தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக ரோஹன நிஷாந்த சேனாநாயக்க மேலும் தெரிவித்தார். (நி-8)

# வாக்குப் பெட்டிகளுடன் சென்ற பேருந்து விபத்து



(கொழும்பு)

காலி சவுத்லேண்ட் பெண்கள் கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று வீதியில் சென்ற காருடன் மோதி விபத்திற்குள்ளானது.

நேற்றுக் காலை புஸ்ஸ வெல்லமடை பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இவ் விபத்தில் எவருக்கும் எவ்விதக் காயமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் விபத்துக்குள்ளான பேருந்திலிருந்த வாக்குப் பெட்டிகளை வேறு வாகனத்தில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3258

### நளின்




### இந்து




### பிரதீப்




### சந்திரா




### முகுந்தன்




### சயிந்தவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றிலிருந்து...

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 32 வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனுடைய சடலம் மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## படகு மூலம்...

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு ஆகிய தீவகப் பகுதிகளுக்கு விசேட படகுகள் மூலம் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து நேற்றுப் புதன்கிழமை தீவகங்களுக்கான வாக்குப் பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடன் பேருந்துகளில் குறிகாட்டுவான் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து விசேட படகுகளில் தீவகப் பகுதிக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இன்று வியாழக்கிழமை வாக்களிப்பு நிறைவு பெற்றதும், நெடுந்தீவு தவிர ஏனைய தீவகப் பகுதிகளில் இருந்து வாக்குப் பெட்டிகள் விசேட படகுகளில் குறிகாட்டுவான் பகுதிக்கு எடுத்து வரப்பட்டு, பேருந்துகளில் வாக்கெண்ணும் நிலையமான யாழ். மத்திய கல்லூரிக்கு எடுத்துவரப்படும்.

நெடுந்தீவில் இருந்து வாக்குப் பெட்டி விமானப்படையினரின் உலங்கு வானூர்தியில் யாழ்.மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்படும். (ம-7,33)

## மாங்குளத்தில்...

இடம்பெற்ற மரணச் சடங்குகளுக்காக மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து மீண்டும் கிழக்கு மாகாணம் நோக்கி ஞாயிற்றுக்கிழமை 10ஆம் திகதி சென்று கொண்டிருந்தபோது இரவு 8.30 மணியளவில் மாங்குளம் கொக்காவில் பகுதியில் பன்றி ஒன்று குறுக்காக ஓடியதன் காரணமாக சடுதியாக திருப்ப முற்பட்ட ஹயஸ் வான் தலைகீழாக புரண்டு விபத்திற்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை மேற்படி பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஏனைய இருவரும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## தேர்தலை...

இராணுவம், கடற்படை, விமானப் படை, விசேட அதிரடிப்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உட்பட பல நிறுவனங்களின் முயற்சிகளை இந்த மையம் ஒருங்கிணைக்கும்.

மக்கள் தேர்தல் தொடர்பான பிரச்சினைகள் அல்லது முறைப்பாடுகள் இருப்பின் பின்வரும் இலங்கங்களுக்கு அழைப்பதன் மூலம் தகவல்களை வழங்கலாம். 0112 027 149, 0112 013 244.

ட்ரோன்களைப் பயன்படுத்தி கண்காணிப்பு நடத்தப்படுவதோடு நாடு முழுவதும் 3,000 அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

சமூக ஊடகங்களின் செயற்பாடுகளும் கண்காணிக்க 602 அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்னல்...

ழந்துள்ளார்.

குறித்த நபர் நெல் வயலில் உழுது கொண்டிருந்தபோது இந்த அனர்த்தத்திற்கு ஆளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் சம்பவத்தையடுத்து மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## தேர்தல் சட்ட...

காப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல்கள் சட்டத்துக்கும், பொதுச் சட்டத்துக்கும் அமைய பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு பொலிஸ் உட்பட முப்படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்களித்தன் பின்னர் வீடுகளுக்கு செல்லுங்கள், பொது இடங்களில் சட்டம் மற்றும் ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை இயலுமான வகையில் தவிர்த்துக் கொள்ளுங்கள். அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வேட்பாளர் ஒருவர் வாக்காளர்களுக்கு வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குச் செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்டவிரோதமானது. விசேட தேவையுடையவர்கள். வயதுமுதிர்ந்தோர் ஆகியோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதாயின் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திடம் முன்கூட்டியதாகவே அனுமதி பெற வேண்டும்.

தேர்தல் பணிகளின் நிமிர்த்தம் 63,145 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நேரடியாக கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன் 3200 விசேட அதிரடிப் படையினரும், 6000 இணை சேவை உத்தியோகஸ்தர்களும், 11 ஆயிரம் முப்படையினரும் 12227 சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

3109 நடமாடும் சேவைகளும், வாகனச்சோதனைகளுக்காக 269 வீதித் தடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1591 தற்காலிக தொழிலாளர்கள் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்புக் கடமைகளுக்காக 4525 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பொதுத்தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு நிமிர்த்தம் பொலிஸார் உட்பட முப்படையினர் உள்ளடங்கலாக சுமார் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். தேர்தல் மற்றும் பொதுச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிப்பு முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும் என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.11.13
சீட்டிழுப்பு இலக்கம் 5655
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 1 7 7 0 1 3
அத சம்பத
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 7 0 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 230
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1685
T 13 34 36 45 T
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம் 02804
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 13/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2003
Z 16 02 38 49 80
Double Chance 137488
தொலைபேசி: 0112-470662, 0114-607000 இணையம்: www.nlb.lk

லக்சி 7 VIP
திகதி 2024.11.13
சீட்டிழுப்பு இலக்கம் 0481
W 5 8 1 3 3 2 W
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3897
சீட்டிழுப்பு திகதி 13.11.2024
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 28 39 66 71
E 009357
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.13
சீட்டிழுப்பு இலக்கம் 964
வெற்றி இலக்கங்கள்
துலாம் 37 43 49 61 துலாம்
தன யோக இலக்கம் 138737 தேசிய லொத்தர் சபை நாளுக்கான விதி எண் 39

உத்தியோகபூர்வ முடிவுகள்
13.11.2024 வெற்றி வாரம் 363 வர்ணம்
ஆங்கில எழுத்து L
8 8 0 5 8 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,532,316.00
14044
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2629 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2024.11.13 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 19 66 73 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,490,864.00

சனிதா
திகதி 13.11.2024 வெற்றி வாரம் 4790 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 25 35 44 50 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,221,462.00
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 28636
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4341 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 13.11.2024 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 07 19 42 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,314,088.40
160894

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 10 08 34 38 40
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1805
திகதி 13.11.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,344,956.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.11.13 வெற்றி வாரம் 2077 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 08 21 31 68 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,305,929.20
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2455
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2024.11.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,161,863.20
வெற்றி இலக்கங்கள் 03 33 38 62 0
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 884153
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ஆவது பாரா...

தேர்தலில் மொத்தம் 8,888 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், 17,140,354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதியுடையோர் ஆவார்.

நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 13,421 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

வாக்காளர் அட்டை பெறாமல், வாக்காளர் பட்டியலில் பதிவு செய்திருந்தால், அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணத்தை எடுத்துச் சென்று வாக்களிக்கலாம் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பின்வரும் ஆவணங்கள் அதற்கு பொருந்தும்:

* தேசிய அடையாள அட்டை
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
* செல்லுபடியாகும் வாகன சாரதி உரிமம்
* பொது சேவை ஓய்வூதிய அட்டை
* முதியோர் அடையாள அட்டை
* தேசிய அடையாள அட்டை தகவலை உறுதிப்படுத்தும் கடிதம்
* மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை
* சாதாரணமானவர்களுக்கு தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை

தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 64,000 ஆகும்.

2024 பாராளுமன்றத் தேர்தலின் வாக்குப்பதிவை கண்காணிக்க உள்நாடு வெளிநாடுகளில் இருந்து கண்காணிப்பாளர்களும் இணைந்துள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் மற்றும் அனைத்து எழுதுபொருட்களும் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தாமதி...

கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் பணிகள் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாடளாவிய ரீதியில் உள்ள 13,421 வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் அனுப்பிவைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் அதிகளவான வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் உட்பட வாக்களிப்புக்கான இதர பொருட்கள் கொழும்பு றோயல் கல்லூரி, டி.எஸ். சேனாநாயக்கா கல்லூரிகளில் இருந்து நேற்று காலை சகல வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. அதேபோல் சகல தேர்தல் தொகுதிகளுக்குமான வாக்குப்பெட்டிகளும் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பாதுகாப்பு தரப்பினரது முழுமையான ஒத்துழைப்புடன் பொதுத்தேர்தலுக்கான சகல பணிகளும் திட்டமிட்ட வகையில் சிறந்த முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இன்று காலை 7 மணிமுதல் பி.ப 4 மணிவரை வாக்களிப்பு நடைபெறும். தாமதமில்லாமல் வாக்களிக்கச் செல்லுங்கள்.

வாக்களிக்கச் செல்லும் போது வாக்காளர் அட்டை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு செல்லுங்கள். வாக்காளர் அட்டையில்லாதவர்கள் வாக்களிப்பு மத்திய நிலையத்துக்கு சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் வாக்களிக்க முடியும்.

வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களிப்பின் போது வாக்களிப்பு நிலைய உத்தியோகஸ்தர்களுக்கும், வாக்காளர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைத் தடுப்பதற்காகவே வாக்காளர் அட்டை வழங்கப்படுகிறது. ஆகவே வாக்காளர் அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் தவறாமல் வாக்காளர் அட்டையைக் கொண்டு செல்ல வேண்டும்.

தாமதமில்லாமல் வாக்களிக்கச் செல்லுங்கள். வாக்களித்ததன் பின்னர் வீட்டில் இருங்கள். சிறந்த முறையில் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டத்துக்கும், நாட்டின் பொதுச்சட்டத்துக்கும் அமைய செயற்படுவது சிவில் பிரஜைகளின் பொறுப்பாகும். ஆணைக்குழு வெளியிடும் உத்தியோகபூர்வ முடிவுகள் மீது மாத்திரம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்றார். (ம-7)

## விடுமுறை...

வழங்காவிட்டால் நிறுவனத்தின் பிரதானிக்கு ஒரு மாதகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க விடுமுறை வழங்குவதில்லை என்ற முறைப்பாடு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இடம்பெறும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்குவதில்லை என்ற முறைப்பாடு எமக்குக் கிடைத்திருக்கிறது. அவ்வாறு எந்த நிறுவனமாவது, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளதன் பிரகாரம், வாக்களிக்க செல்ல இருக்கும் தூரத்துக்கு அமைய வாக்களிக்க செல்ல விடுமுறை வழங்காவிட்டால், நிறுவனத்தின் பிரதானிக்கு ஒரு மாதகாலம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். அல்லது ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் இரண்டும் விதிக்கப்படலாம். அதனால் மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேர்தல் பிரசார பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் பல்வேறு வழிகளில் கட்டணம் செலுத்தப்பட்ட தேர்தல் விளம்பரங்கள் பிரசுரமாகி வருகின்றன. நேற்று முன்தினம் வரை இதுதொடர்பாக 580 விளம்பரங்கள் பிரசுரமாகி இருப்பது தொடர்பில் எமக்கு தகவல் கிடைத்துள்ளது. இதுதொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாங்கள் முறையிட்டிருந்தோம். தற்போது அது 80வீதம் வரை குறைவடைந்துள்ளது. இது தவிர தனிப்பட்ட முறையில் சமூகவலைத்தலங்களில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன. அது தொடர்பாகவும் நாங்கள் அவதானம் செலுத்தி வருகிறோம்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் வன்முறைகள் நிறைந்த இந்த நாட்டின் தேர்தல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தை காணக்கூடியதாக இருந்தது. அது இந்தமுறை பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த தேர்தல் நடவடிக்கைகளின்போதும் மோதல் சம்பவங்கள் மிகவும் குறைவாகவே பதிவாகியுள்ளன. வவுனியாவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் மற்றும் மொனராகலையில் வேட்பாளர் ஒருவர் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளமை போன்ற சம்பவங்களே இடம்பெற்றுள்ளன.

அதனால் தேர்தல் கலாசாரம் குறிப்பிடத்தக்களவில் நல்ல நிலைக்கு வந்துள்ளது என்றார். (ம-7)

# மரண அறிவித்தல்

மலர்வு
27 - 08 - 1955



உதிர்வு
13 - 11 - 2024

## சர்வவேஸ்வர லலிதா கமலநாதன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சர்வேஸ்வர லலிதா கமலநாதன் அவர்கள் 13.11.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கமலநாதனின் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)அன்பு மனைவியும் மற்றும் காலஞ்சென்ற சர்வேஸ்வர ரூபி, சர்வேஸ்வர ஜோய், காலஞ்சென்ற சர்வேஸ்வர செவ்வேள், சர்வேஸ்வர விமோசனம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சர்வானந்தம், கமலானந்தன், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் மற்றும் சர்மிளா (லண்டன்), சர்மிலன்(லண்டன்), சர்வன் (லண்டன் ), ஜனேசன் (கனடா ), உமாஜினி ஆகியோரின் அன்புச் சிறியதாயும் வஜனியின் பாசமிகு அத்தையும் லேந்தினி, மோகன் ஆகியோரின் அன்புப் பெரியதாயும் லிங்கேஸ்வரன், வாசுகி, வேணிக்கா, கயல்விழி, பிரசாந் ஆகியோரின் அன்பு மாமியும் ஷாலினி, கார்த்திகன், கபிலன், கிஷோர், கிஷானி, கிஷாந், பாவந்திகா, விஹான், ஏகனேகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல் :
குடும்பத்தினர்

(2426)


**பணிப்பெண் தேவை**

கொழும்பில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.சமையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
077 738 6392
(2425)

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
•Visit visa
•Student visa
•Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
(2415)
075 033 6759

**தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள விற்பனை முகவர் நிறுவனத்திற்கு
◆விற்பனைப் பிரதிநிதி (Sale rep)
◆விற்பனை உதவியாளர்
தேவை
077 985 1946
(2584)

**மொத்தக் கொள்வனவு**

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
(538)
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/=
077 780 8030
80/=

**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1582)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.